# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF THE PRINCIPAL SUB JUDGE, KARUR
# O.S. No. 357/2020
# Deposition of Witness for the Plaintiff – PW1

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 20th day of 12/2024**

| | | | |
|---|---|---|---|
| **Name:** | **சுகுணா** | **Caste:** | |
| **Father/ Husband Name** | **செல்லப்பன்** | **தொழில்** | செயல் அலுவலர், அருள்மிகு பாலசுப்பிரமணிய சுவாதி திருக்கோவில் வெண்ணைமலை |
| **Village:** | | **Religion:** | |
| **Taluk:** | | **Age :** | 38 |

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் வாதி கோவிலின் செயல் அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் வாதி அருள்மிகு பாலசுப்பிரமணிய சுவாதி திருக்கோவில் வெண்ணைமலை இவ்வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பு சாட்சியத்தில் நிரூபண பிரமான வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண பிரமான வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை படித்து பார்த்து, புரிந்து கொண்டு கையொப்பம் செய்தேன். நிரூபண பிரமான வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை என் தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| வ.எண். | தேதி | ஆவணத்தின் தன்மை | சான்றாவணம் |
|---|---|---|---|
| 1. | 23.10.2019 | மாண்புமிகு மதுரை உயர்நீதிமன்றம் நீதிப்பேராணை எண் 64/2018-ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் ஆன்லைன் பதிவிறக்கத்தை தாக்கல் செய்கிறேன். | வா.த.சா.ஆ.1 |
| 2. | 28.12.2011 | பிரதிவாதி ராஜலெட்சுமி பெயரில் ஏற்பட்ட கிரய ஆவணத்தின் சான்றிட்ட நகல் | வா.த.சா.ஆ.2 |

| | | | |
|---|---|---|---|
| 3. | 28.03.1863 | காதப்பாறை கிராம மானியங்கள் பதிவேட்டு நகல் சான்றிட்ட நகலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது. (அசல் ஆவணம் மாவட்ட ஆட்சியர் கட்டுப்பாட்டில் இருப்பதால் சாட்சி தெரிவித்தார்) கற்றறிந்த பிரதிவாதி வழக்கறிஞரின் ஆட்சேபணையின்றி மானிய பதிவேட்டு நகல் வா.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டது. | வா.த.சா.ஆ.3 |
| 4. | | காதப்பாறை கிராமம் ரீசர்வே, ரீ செட்டில்மெண்ட் பைசலாதிய பதிவேட்டு நகல் அசலுடன் சான்றிட்ட நகலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது. (அசல் ஆவணம் மாவட்ட ஆட்சியர் கட்டுப்பாட்டில் இருப்பதால் சாட்சி தெரிவித்தார்) கற்றறிந்த பிரதிவாதி வழக்கறிஞரின் ஆட்சேபணையின்றி ரீ செட்டில்மெண்ட் பைசலாதிய பதிவேட்டு நகல் வா.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டது. | வா.த.சா.ஆ.4 |
| 5. | 26.07.1967 | செட்டில்மெண்ட் தாசில்தார் வழங்கிய உத்தரவு சான்றிட்ட நகலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது. (அசல் ஆவணம் மாவட்ட ஆட்சியர் கட்டுப்பாட்டில் இருப்பதால் சாட்சி தெரிவித்தார்) கற்றறிந்த பிரதிவாதி வழக்கறிஞரின் ஆட்சேபணையின்றி செட்டில்மெண்ட் தாசில்தாரின் உத்தரவு நகல் வா.த.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டது. | வா.த.சா.ஆ.5 |
| 6. | 02.12.2019 | பரம்பரை அறங்காவலர் தீர்மானம் அசல் பதிவேடுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு நகல் கற்றறிந்த | வா.த.சா.ஆ.6 |

| | | | |
|---|---|---|---|
| | | பிரதிவாதி வழக்கறிஞரின் ஆட்சேபணையுடன் வா.த.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. | |
| 7. | 29.07.2015 | இந்து சமய அறநிலைய துறை ஆணையர் நடவடிக்கை சான்றிட்ட நகலுடன் திறந்த நீதிமன்றத்தில் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு நகல் கற்றறிந்த பிரதிவாதி வழக்கறிஞரின் ஆட்சேபணையின்றி இந்து அறநிலைய துறை ஆணையரின் நடவடிக்கை நகல் வா.த.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டது. | வா.த.சா.ஆ.7 |
| 8. | 12.11.2019 | இந்து அறநிலையதுறை முதன்மை செயலாளர் /ஆணையர் அவர்களின் உத்தரவு அசலுடன் நகல் திறந்த நீதிமன்றத்தில் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு நகல் கற்றறிந்த பிரதிவாதி வழக்கறிஞரின் ஆட்சேபணையின்றி இந்து அறநிலைய துறை ஆணையர் உத்தரவின் நகல் வா.த.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டது. | வா.த.சா.ஆ.8 |

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

**(பிரதிவாதி வழக்கறிஞர் ஆஜர். கற்றறிந்த பிரதிவாதி வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.)**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்
கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.
ஒ/ம். திரு. வேடியப்பன்
முதன்மை சார்பு நீதிபதி,
கரூர்.